**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 9/2014**

**Deposition of Witness for : PW 33**

**Name** : திரு. ராஜேந்திரன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20-10-2022.**

**முதல் விசாரணை** -

நான் வருவாய் துறையில் பணிபுரிந்து இறுதியாக கடலூரில் துணை ஆட்சியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். 2009ல் தண்டராம்பட்டு வட்டாட்சியராக நான் பணியில் இருந்த போது 13.1.2009 அன்று திருவண்ணாமலை கிராமிய துணை கண்காணிப்பாளர் அவர்களின் தபாலைப் பெற்று 13.1.2009ல் புதைக்கப்பட்ட சேட்டு (எ) கோபால் த/பெ. குப்புசாமி கவுண்டர் என்பவரின் பிரேதத்தை தோண்டி எடுத்து சடலக்கூராய்வு செய்வதற்காக கோரியிருந்தார். அதன் பேரில் நான் தானிப்பாடி பணி மருத்துவர்களுக்கு சடலக்கூராய்வு செய்ய வேண்டி நான் கடிதம் அனுப்பினேன். கடந்த 14.1.2009 பிற்பகல் 2 மணிக்கு மோத்தக்கல் கிராமத்தில் உள்ள மயானப்பகுதியில் புதைக்கப்பட்டு இருந்த சேட்டு (எ) கோபாலின் பிரேதத்தை ஊர் பொதுமக்கள், போலீசார் மற்றும் மருத்தவர்கள் முன்னிலையில் தோண்டி எடுத்து பிரேத கூராய்வு செய்யப்பட்டது. அதன் பேரில் சாட்சிகள் முன்னிலையில் நான் ஒரு பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 30. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

எனக்கு காவல் துறை கண்காணிப்பாளரிடம் இருந்து வந்த வேண்டுகோள் கடிதத்தை நான் விசாரணையின் போது ஒப்படைத்தேன். நான் மருத்துவருக்கு அனுப்பி வேண்டுகோள் கடிதத்தை நான் போலீசாரிடம் கொடுத்தேன் என்றால் நியாபகம் இல்லை. அ.சா.ஆ. 30ல் நிறைய இடைவெளிகள் உள்ளன என்றும், வெள்ளை தாளில் கையெழுத்து பெற்றுக்கொண்டு பின்னிட்டு என் அலுவலகத்தில் வைத்து தயார்

செய்தேன் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- ராஜேந்திரன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.